# அச்சுவை பெறினும் வேண்டேன்

வண்டினம் முரலும் சோலை , மயிலினம் ஆடும் சோலை , கொண்டல் மீதணவும் சோலை , குயிலினம் கூவும் சோலை , அண்டர்கோன் அமரும் சோலை நம் திருவரங்கம். திருவாகிய பிராட்டி நர்த்தனம் ஆடிய இடம் !திருவரங்கம் பெருமை பாடாத இதிகாச புராணம் இல்லை . நம் பாரத நாட்டின் வரலாற்றிலேயும் பல முக்கிய நிகழ்வுகளை கொண்ட ஊர். திருவரங்கம் என்னும்போது , அந்த ஊரையும், அங்கு இருக்கும் கோவிலையும் மற்றும் அங்கு உறையும் அரங்கன் ,அவன் பிராட்டி இவர்களை பிரித்து பார்க்க இயலாது . இவை அனைத்தும் அங்குள்ள மக்களின் வாழ்கையில் கலந்த ஒன்று. இரு புறம் காவேரி நடுவே ஆசிய கண்டத்திலேயே பெரிய கோபுரம் ,ஏழு பிரகாரங்களை கொண்ட ஊரையே கோவிலாய் கொண்ட இடம் .

ஆடி பதினெட்டின் போது காவேரி ஆடிவரும் அழகு ஒரு கண்கொள்ளா காட்சி . முன்காலத்தில் காவேரி தாய் முத்து , பவழம் , சந்தனம் , தந்தம் போன்றவற்றை ஏந்தி வந்திருக்கிறாள் , அது திருவரங்கம் கரையோரம் ஒதுங்கி இருக்கிறது , இதை பல சங்க கால பாடல்களில் காண்கிறோம் .காவிரியில் நீர் இருந்தாலே திருவரங்கத்து வாசிகளுக்கு ஆனந்தம் சேர்க்கும் . காவிரியே அந்த ஆனந்தத்தை கொண்டு வந்து சேர்கிறாள் . இரு திருவரங்கத்துவாசிகள் சந்தித்தால் முதல் கேள்வி, கோயில் எப்படி இருக்கிறது மற்றும் நம் அரங்கன் எப்படி இருக்கிறான் ?இரண்டாம் கேள்வி, காவிரியில் நீர் ஓடுகிறதா? இதற்கு பின்பு தான் பிற கேள்விகள் வரும்.

உலகிற்கோ அரங்கன் அண்டர்கோன், ஆனால் இந்த தலத்தின் இளம் காளையர்க்கோ அவன் தோழன், இளம் பெண்டிருக்கோ அவன் அழகிய மணவாளன் , வயது முதிர்ந்தவர்க்கோ அவன் செல்லபிள்ளை !கண்கள் ஆயிரம் வேண்டும் அவன் அழகை காண , நாவாயிரம் போதாது அவன் பெருமையை பேச . அவன் திருவீதி உலா வரும் அழகை கண்டு கொண்டே காலம் கழிக்கலாம் . அவன் யானை மேல் வந்தால் ஒரு கம்பீரம் , ஹனுமான் மேல் வந்தால் ஒரு சாந்தம் , கருடன் மேல் வந்தால் தெய்வீகம் , குதிரை மேல் வந்தால் வீரம் என்று அவன் ஒவ்வொரு வாகனத்திலும் ஒவ்வொன்றை நமக்கு காட்டுவான் , அதில் நம்மனதை இழுத்து பூட்டுவான் .

குதிரை மேல் வைய்யாளி காணும்போது இளைஞர்கள் குதூகலிக்க , பெரியோர்கள் எப்போது அவன் வைய்யாளி முடித்து இறங்குவான் என்று பதற்றத்துடன் பார்த்திருப்பர் . அவன் ஆடிமுடித்தப்பின் இளைஞர்கள் கரகோஷமேழுப்புவர் ,பெரியோர்களோ பெருமூச்சுவிடுவர் , சிலர் தம் பிள்ளை பத்திரமாக வந்தது போலவே ஆனந்தகண்ணீர் வடிப்பர், அவன் ஏறிய வாகனமான குதிரையோ களைப்பில் மூச்சுவிட்டபடி இருக்கும் . அப்படி குதூகலமாய் குதித்தாடுவான் ! ஒரு இறைவனுக்கு கரகோஷம் எழுப்பி நாம் இங்குதவிர வேறு எங்கும் காண இயலாது .

அரங்கன் பெருமை பேச ஆயிரம் நாவு பத்தாது என்றால், அவன் பிராட்டி பெருமையை நினைத்தாலே நமக்கு நாவே எழாது . அவள் அழகுக்கு நிகரென்று அவனையும் சொல்ல முடியாது. அவனுக்கு எல்லாவிதத்திலும் சரிநிகர் சமானமானவள். அவன் பெரிய பெருமாள் என்றால், இவள் பெரிய பிராட்டி!படிதாண்டா பத்தினி, அதனால் அரங்கன் என்னென உற்சவங்கள் காண்கிறானோ அதையெல்லாம் அவள் இடத்திலேயே காண்கிறாள். இவள் நவராத்திரி உற்சவத்தில் மிகவும் குதூகலித்து இருப்பாள். . கோயில் யானை அழகாக நடனமாடியும் , வாய் இசை கருவியை வாசித்தும் அனைவரையும் மகிழ்விக்கும்.

இங்கோ நாளொன்றும் திருநாள் தான், ஒவ்வொரு திருநாளும் ஓர் அழகு. அதில் பங்குனி திருநாளோ தனி அழகு ! அரங்கன் ஜீயபுரம் எழுந்தருளும் போது தெரியும் கருணை , உறையூர் செல்லும் போது வெளிப்படும் காதலனின் கள்ளம் , பெரியபிராட்டி இடம் மட்டை அடி வாங்கும்போது தெரியும் அவன் குறும்பு, இருவரும் சேர்ந்திருக்கும் போது தெரியும் அவர்களின் ஆனந்தம், எத்தனை விதமான காட்சிகள் , ஒவ்வொன்றும் எத்தனை அழகு ! அத்தனையும் அமுதம் அன்றி வேறில்லை . அதனை அள்ளி பருகுபவருக்கு முதுமை என்பதே என்றுமில்லை. இவை அனைத்தும் கிடைக்கும் இடம் திருவரங்கம் அன்றி வேறில்லை.

ஒவ்வொரு வீதியும் ஒரு காவியம் பாடும் , அது இன்று அங்கு விளையாடும் குழந்தைகள் மனதில் போய் சேரும் . இந்த ஊர் காணாத போர்க்களம் இல்லை , இது தென்னகத்து சோம்நாத் என்றால் அதை மறுப்பார் இல்லை . வைஷ்ணவம் என்னும் ஆலமரத்தின் ஆணிவேர் , அதனாலே இதற்க்கு பூலோக திருநாடென்று பெயர் . ஆழ்வார்களும் ஆச்சார்யர்களும் கொண்டாடிய இடம்!அவர்கள் உள்ளம் எல்லாம் உறைந்த ஒரே இடம் . அரங்கம் கொடுக்கும் ஆனந்தத்தை அனுபவித்தவர்கள் "இந்திர லோகமாளும் அச்சுவை பெரினும் வேண்டேன்" என்று ஆழ்வார்கள் மறுத்தது போல் மறுப்பர்.





